DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC.NO. 46/2025

Deposition of Cross Pw1 Dt. 21.07.2026

| | |
|---|---|
| Name | மோத்திசந்த் |
| Husband Name | சம்பாலால் |
| Village Name | மயிலாடுதுறை |
| Age | 80 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day21.07.26.

**A1 present. A2 absent. U/s. 355 BNSS petition filed and allowed.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

மனுதாரர் தரப்பு சான்று ஆவணம் 2 ன் அடிப்படையில் CC163/2013 என்ற வழக்கு மயிலாடுதுறை விரைவு நீதிமன்றத்தில் வழக்கு நடந்து முடிந்துள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு எனக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு எதிராக தள்ளுபடி ஆகவில்லை. அதில் சட்டப்பிரச்சினை உள்ளது என்று தள்ளுபடி செய்யப்பட்டது. தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கிற்கு எதிராக நான் எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான். CC163/2013 தாக்கல் செய்யப்பட்ட புகார் மனுவையோ, நிருபண வாக்குமூலத்தையோ, குறுக்கு விசாரணையையோ இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

CC163/2013 வழக்ககில் உத்தரவு நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இதன் பேரில் செய்யப்பட்ட உயர் நீதிமன்ற உத்தரவை தாக்கல் செய்தேன். CC163/2013 உத்தரவை தாக்கல் செய்தால் இந்த வழக்கு பாதிக்கப்படும் என்பதால் வேண்டும் என்றே நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. CC163/2013 இந்த வழக்கில் Crlmp No. 3270/2014 2 வது எதிரியை வழக்ககில் சேர்க்கவேண்டும் என்றும் சட்டப்பிரிவுகள் 420 மற்றும் ,109 பிரிவுகளில் சேர்க்கச் சொல்லி தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தள்ளுபடி செய்யப்பட்டபிறகுதான் இந்த வழக்கு தாக்கல் செய்தேன்.

தள்ளுபடி செய்யப்படும் வரை இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நாகப்பட்டினம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சீராய்வு மனு எண் 13/2014 தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு முழு விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். சீராய்வு மனு மீது சென்னை உயர் நீதிமன்றத்தில் Criminal OP No. 22917/2022 அந்த மேல் முறையீடு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. CC163/2013 வழக்கு நடைபெற்ற நீதிமன்றத்திலேயே வேறு நீதிமன்றத்திற்கு மனு தாக்கல் செய்த மனு எண் Crlmp No. 1330/2021 அந்த மனுவும் முழு விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த மனு மீது சென்னை உயர் நீதிமன்றத்தில் உத்தரவு வாங்கிதான் இந்த வழக்கை நடத்துகிறேன். அந்த உத்தரவு மனுவை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

நான் காசோலையை பணமாக்க தாக்கல் செய்யப்பட்டதில் போதிய பணம் இல்லை என்பதால்தான் திரும்ப வந்துவிட்டது என்றால் சரிதான். அந்த காசோலை 1 வது எதிரி காசோலை இல்லை என்றோ 2 வது எதிரியின் காசோலை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் CC163/2013 என்ற

S. Mothichand

வழக்கின் உத்தரவு நகல் என்றால் சரிதான். (**அந்த உத்தரவு நகல் எ.ம.சா.ஆ –1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) மேற்படி பு.சா.1 ன் சாட்சியத்தை பரிசீலிக்கும் பொழுது புகார்தாரரே காசோலையில் எதிரியின் பெயர் போட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்று ஒப்புக்கொண்டுள்ளார். புகார்தாரரே இந்த சங்கதிகளை ஒப்பு கொண்டுள்ள நிலையில் எதிரியின் வங்கி கணக்கு உள்ள காசோலை பு.சா.ஆ.1 இல்லை என்பது தெளிவாக தெரிய வருகிறது. மேலும், புகார்தாரர் கொடுத்த கடன் ஆனது சட்டபடியான கடன் என்பதை நிரூபிக்கும் பொருட்டு 14.03.2010 ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டை சான்றாவணமாக குறியீடு செய்யவில்லை. இந்த சங்கதிகளை பரிசீலிக்கும் போது புகார்தாரர் தனகு வழக்கை மெய்ப்பிக்கவில்லை என்பது தெளிவாக தெரியவருகிறது மேற்படி தீர்ப்பில் சொல்லப்பட்டது என்றால் உள்ளது.

2 வது எதிரி என்னிடம் கடன் ஏதும் கேட்டுள்ளாரா நான் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் அவர் கேட்கவும் இல்லை நான் கேட்டதாக வழக்கும் கொடுக்கவில்லை. 2 வது எதிரிக்கும் எனக்கும் நேரடியாக பணபரிவர்த்தனை கிடையாது என்றால் சரிதான் 2 வது எதிரி என்னிடம் மோசடி செய்ய முன்கூட்டியே திட்டமிட்டார் என்பதற்கு ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்றால் வங்கி மேலாளர் சாட்சியத்தில் மனைவி காசோலையில் 1 வது எதிரியின் கையொப்பம் இருப்பதாக கூறினார். அப்போதுதான் 2 வது எதிரி குற்றம் செய்துள்ளார் என்பது தெரியவந்தது.

CC163/2013 என்ற வழக்கில் 2 வது எதிரியை எதிரியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதற்கு அவசியமும் இல்லை. CC46/2025 என்ற வழக்கும் CC163/2013 என்ற வழக்கும் ஒரே காசோலையை அடிப்படையாக கொண்ட வழக்குகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் கூறிய சம்பவங்கள் அனைத்தும் அந்த வழக்கில் சொல்லப்பட்ட சம்பவங்கள்தான் என்றால் சரியல்ல அதில் ஏற்பட்ட மாறுபாடுகளால் ஏற்பட்டதுதான் இந்த வழக்கு. இந்த வழக்கு எதிரிகளை தொந்தரவு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கு என்றாலும் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதி...
...முன்னிலையில் சாட்சிக்கு படித்து
காட்டப்பட்டு அவரால் சரியானதென்று
ஏற்கப்பட்டது

21/1/26

நீதித்துறை நடுவர் எண் 1
மயிலாடுதுறை.